சூத்திரம்
www.sooddram.com
The Formula

செய்திகள் | கட்டுரைகள் | வடக்கு கிழக்கு மாகாணத்தில் | எழுத்துரு | Contact us at: sooddram@gmail.com

~~ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக~~

சூத்திரம்
முதற்பக்கம்
FONTS/எழுத்துரு
சர்வதேச நேரம்
தொடர்புகளுக்கு
கட்டுரைகள்
பொதுவிடயம்
அரசியல் சமூக ஆய்வு
இலங்கைத் தமிழர் போராட்டம்
இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
சர்வ தேச அரசியல்
அரசியல் தீர்வு
கவிதைகள்
சமூக விழிப்பு
போராட்டம்
பொது விடயம்
புகைப்படங்கள்
எமது வாழ் நிலங்கள்
போராட்டங்கள்
போராட்ட தடயங்கள்
இணையத்தளங்கள்
கண்ணோட்டம்
பூந்தளிர்
தூ
தேனி

# 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

***நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 28)***

(கிறேசியன், நாவாந்துறை)

நான் தினமும் புதிய வரவுகளை பார்த்திருப்பேன். காரணம் நாங்கள் வெளிநபர்கள் யாரையும் பார்க்க முடியாது. வதைசெய்யும் புலிகளைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கும். புதிதாக பிடித்து வரும் சகோதரர்கள் மூலமாகத்தான் வெளியில் நடப்பவற்றையும், புதிய செய்தியையும் அறியலாம்.

யாழ்ப்பாணக் கோட்டையை இராணுவம் பிடித்தது, மாத்தையாவை சுதுமலையில் வைத்துக் கைது செய்தது, அவருடன் இருந்த புலிகள் இருநூறு பேருக்கும் மேல் சுட்டுக்கொல்லப்பட்டது, யோகியை வெளியேற்றியது போன்ற செய்திகள் அனைத்தையும் புதிதாகப் பிடித்து வரும் சகோதரர்கள் மூலமாகத்தான் அறிந்தோம். பிடித்து வரப்பட்டவர்கள் அடித்து நொருக்கப்பட்டு அவர்களது காயங்கள், வலிகள் ஆறிய பின்னர்தான் இவை போன்ற செய்திகளை நாங்கள் கேட்டு அறியலாம். அவர்களது கவலை, பயம் இவை தீர்ந்த பின்னர்தான் அவர்களும் வாய்திறந்து செய்திகளைச் சொல்வார்கள்.

வழக்கமான காலை உணவுக்குப் பின் ஒருநாள் நாவல் மரத்து சித்திரவதையாளர்கள் உள்ளே வந்து எனது பெயரை உரத்த குரலில் சொல்லி அழைத்தனர். அதே போன்று ஈ.பி.ஆர்.எல்.எப். ன் திருகோணமலை மாவட்ட முக்கிய பொறுப்பில் இருந்த சகோதரர் ஒருவரது பெயரையும் அழைத்தனர். அவரது பெயர் சிவா என்று

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**"அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

நினைக்கிறேன். இருவரும் வெளியே சென்றோம். நாவல் மரத்தை நோக்கி நடக்கச் சொன்னனர். வேகமாக நட என்று எனது முதுகில் வையை வைத்துத் தள்ளினர். காலில் சங்கிலி விலங்கு இருந்ததால் தடக்கி குப்புற விழுந்தேன்.

தூஷண வார்த்தைகளைச் சொல்லி ஓர் மண்வெட்டி பிடி போன்ற கட்டையால் அடித்தனர். முதுகில் அதே போன்று ஈ.பி.ஆர்.எல்.எப் சகோதரரையும் தள்ளிவிட்டு கீழே விழுந்தபின் அடித்தனர். கையில் விலங்கிடாதபடியால் கைகளை ஊன்றி எழுந்திருந்தேன். மீண்டும் நாவல் மரத்தை நோக்கி மெதுவாக நடந்து இடத்தை அடிந்தேன். அந்தச் சகோதரரும் என்னுடனேயே வந்தார்.

நாவல் மரத்தின் கீழே பல இடங்களில் பிடி இல்லாத பிக்காஸ்களை நிரந்தரமாக நிலத்தில் பதித்து வைத்திருந்தனர். அவற்றில் மூன்று பிக்காசுகளுக்கு நடுவில் நிலத்தில் படுக்கும் படி கூறினர். அவர்கள் கூறியபடி படுத்தேன்! வானத்தைப் பார்த்தபடி படுத்த எனது கைகள் இரண்டையும் இழுத்து கைவிலங்கிட்டு வலது கையை ஒரு பிக்காசிலும், இடது கையை ஒரு பிக்காசிலும் பிணைத்தனர். காலுக்குக் கீழே இருந்த பிக்காசில் இன்னுமோர் கைவிலங்கை எடுத்து கால்சங்கிலியில் போட்டு இழுத்து மாட்டினர். ஜேசுநாதரைச் சிலுவையில் அறைந்தது போன்று எங்களை நிலத்தில் வைத்து கைகளில் ஆணிகள் அடிக்காமல் விலங்குகளால் பிணைத்து அவரை ஞாபகப்படுத்தினர்.

புலி விலங்குகளில் ஏறக்குறைய பத்துப் பேர்வரை இருந்தனர். இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கியவர் கௌதமன். துணைக்கு நின்றவர்கள் மஞ்சு மற்றும் சின்னக் கேடி. இவர்களுடன் திசை மற்றும் மாசிலும் இருந்தனர். ஏனையோர்களது பெயர்கள் தெரியாது. சுமார் பத்துமணிவரை நானும் அந்தச் சகோதரரும் வானத்தைப் பார்த்துக் கொண்டு கிடந்தோம். பிக்காசில் மாட்டப்பட்டிருந்த கைகளை இழுத்துப் பார்த்தேன். அது அசைவதாகத் தெரியவில்லை. நீண்ட காலமாக அவை நிலத்தில் புதைக்கப்பட்டிருந்தன என்பது தெரிந்தது. வந்தனர் வீரர்களாகத் தெரிந்த விலங்குகள்.

கௌதமனும் மஞ்சுவும் கேள்விகளை ஆரம்பித்தனர்.

கேள்வி – உண்மையாகச் சொல்லு ஈ.என்.டி.எல்.எப்.புடன் உனக்கு தொடர்பு இருக்குதானே! சொல்லு!

பதில் - இல்லை, எனக்கு இப்போது எந்தத் தொடர்பும் கிடையாது.

கேள்வி – நீ பொய் சொல்கிறாய்!

பதில் - நான் சொல்வது உண்மை.

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………”

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

*இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!*
நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?

(சாகரன்)

சின்னக் கேடி எனது வயிற்றில் தனது வலது காலால் மிதிக்கிறார். பின்னர் காலைத் தூக்கி வயிற்றில் உதைத்தார்.

கேள்வி – உன்னைப் பிடிக்கேக்க நீ சங்கிலி போட்டிருந்தனி. கொள்ளையடிச்சுத்தானே வாங்கினனீ?

பதில் - இல்லை! எனது முதலாளி வாங்கிக் கொடுத்தார். நீங்கள் அவரிடமே கேளுங்கள். அவர் எங்க வாங்கியது என்றும் சொல்வார்.

இதைக் கேட்டதும் கோபம் வந்தது கௌதமனுக்கு. என்னடா எங்களைப் போய்க் கேக்கச் சொல்றியா என்று கேட்டு ஓர் தடியினால் எனது நெஞ்சில் அடித்தார். அப்போது மஞ்சு வயிற்றில் அடித்தார்.

கேள்வி – கிளிநொச்சியில ஆயுதங்கள் புதைச்சு வைச்சிருக்கு. எங்க புதைச்சு வச்சனீ?

பதில் - எனக்குத் தெரியாது. அப்படி ஆயுதம் எதுவும் புதைக்கப்பட்டதை நான் பார்க்கவும் இல்லை.

கேள்வி - ஈ.பி.ஆர்.எல்.எப். ராஜாவுடன் உனக்கு தொடர்பு இருக்கு. ஏன் தொடர்பு வைத்தாய்?

பதில் - இயக்க ரீதியாக எனக்கு யாருடனும் தொடர்பு கிடையாது. எந்த இயக்கத்தவர்களையும் நான் சந்தித்ததும் கிடையாது.

கேள்வி - ஈ.பி. தோமஸ்சை சந்தித்தனிதானே?

பதில் - இல்லை தோமஸ் எனது ஊர்தான். ஆனால் இயக்க ரீதியாக நான் அவருடன் கதைத்தது கிடையாது.

டேய், இவன் எதையும் சொல்லிறான் இல்லை! கொண்டு வாடா துண்டை என்றார் சின்னக் கேடி!

வெள்ளை நிற துண்டு ஒன்றைக் கொண்டு வந்தனர். அது வேட்டியிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட துண்டாக இருந்தது. எனது முகத்தில் அந்தத் துணியைப் போட்டார் மஞ்சு. எனது நெஞ்சில் அமர்ந்தார் சின்னக் கேடி. நெஞ்சின் மேல் அமர்ந்த சின்னக் கேடி தனது இரு கைகளாலும் எனது நாடியை மேல் நோக்கிப் பலம் கொண்டு தள்ளினார். அவர் அப்படித் தள்ளிக் கொண்டு இருக்கும் போது கௌதமன் ஒரு பிளாஸ்ரிக் போத்தலிருந்த தண்ணீரை எனது மூக்கினுள் விட்டார்.

எனக்கு மூச்சுத் திணறியது. மிருகங்களின் கழுத்தை நெரித்தால் ஏற்படும் சத்தம் போன்று எனது தொண்டையிலிருந்து வெளிவந்தது. அப்படிச் சத்தம் வருவதைத் தடுக்கும் விதத்தில் சின்னக் கேடி எனது நாடியை அதிக பலம் கொண்டு மேலும் மேலும் தள்ளினார். எனக்கு புரக்கேறி மூச்சு


வெல்லப்போவது யார்…..? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம் - *பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்……

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

*“ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.”*
**வெகு விரைவில்…**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

ஆணை இட்ட அதிபர் ‘கை’, வேட்டு வைத்த

நின்றுவிடும் போன்று இருந்தது. கைகால்களை இழுத்தேன், முடியவில்லை, பிக்காசுகள் அவ்வளவு பலத்தையும் தாங்கிக் கொண்டு நின்றன. சின்னக் கேடி மேற்கொண்டு மார்பைத் தனது பின் பக்கத்தால் நெரித்தார்.

கௌதமன் சத்தம் போடுகிறார். டே சொல்லடா, ஆயுதம் எங்கே இருக்கு சொல்லடா! தொடர்ந்து தண்ணீர் எனது மூக்கு வழியாக இருதயம் வரை சென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டது. தெரியும் சொல்கிறேன் என்றும் சொல்ல முடியாத நிலை! கைகள் கட்டப்பட்டுள்ளன, நாடியை மேல் நோக்கித் தள்ளி மூடிப் பிடித்துள்ளனர், மூக்கினுள் தண்ணீரை விடுகின்றனர் எனவே எதனையும் சொல்லமுடியாத நிலையில் சொல்லடா என்கின்றனர்.

கேடியின் கை சற்றுத் தளர்ந்ததும், தெரியும் சொல்கிறேன் என்றேன். உடனே தண்ணீர் ஊற்றுவதை நிறுத்தினர். வேட்டித் துண்டை எடுத்தனர். சொல்லடா என்றார். நான் எதைச் சொல்வது. மீண்டும் தெரியாது என்று கூறி, நீங்கள் இப்படிச் செய்வதைத் தாங்க முடியாமல் தான் தெரியும் என்று சொன்னேன் என்று கூறினேன்.

டே பாரடா, எங்களுக்கு சுத்துறான் என்று கூறி மீண்டும் அதே வெள்ளைத் துணியை முகத்தில் போட்டனர். இப்போது மஞ்சு எனது மார்புப் பகுதியை அமர்த்தினார். இன்னுமோர் புலி எனது தலைப் பகுதியிலிருந்து இரண்டு கைகளாலும் எனது நாடியை மேல் நோக்கி இழுத்தார். கௌதன் மீண்டும் தண்ணீரை ஊற்றினார் மூக்கினுள்.

வயிற்றின் மேல் சின்னக் கேடி ஏறி நின்றார். அவர் வயிற்றில் ஏறி நின்று மிதித்ததும் என்னை அறியாமல் சிறுநீர் வெளியேறியது. இப்போது நான் இறந்துவிடுவேன் என்று நினைத்தேன். ஒரு போத்தல் தண்ணீர் முடிய அடுத்த போத்தல் தண்ணீர் இப்படி அருகில் ஒரு வாளி தண்ணீர் இதற்கென்றே வைத்திருந்தனர்.

சொல்லடா, சொல்லடா என்று தண்ணீரை ஊற்ற எனக்கு மூச்சுத் திணர்தலைத் தவிர எதுவும் செய்ய முடியவில்லை. மார்பில் ஒருவரும், வயிற்றில் ஒருவருமாக மிதிக்கின்றனர். ஒருவர் நாடியைப் பிடித்த பிடி சற்றும் தளர்வதாகத் தெரியவில்லை...

(தொடரும்....)

ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?

(சாகரன்)

சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.

(சேகர்)

அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.

(அ. வரதராஜப்பெருமாள்)

*தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு*

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?

(மோகன்)

2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!

*'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'*

(சாகரன்)

*சபாஷ் சரியான போட்டி.*

மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.

(யஹியா வாஸித்)

கூத்தமைப்பு

கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!

(சதா. ஜீ.)

*தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை*

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

*தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு*

பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்

(சாகரன்)

இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்

சாகரன்

ஈழ விடுதலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும் - சாகரன்

*அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது*

[*திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*]

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

[வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா?] - சாகரன்

[*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!*] - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com